**அக்ரஹார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை**

---

**1. நிறைவேற்றுப் பொழிப்பு**

அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை இலக்கம் 05/97 இன் மூலம் அக்ரஹார காப்புறுதி முறைமையானது 1997 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அக்காப்புறுதி முறைமையினூடாக அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல் அடிப்படை குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட இக்காப்புறுதி முறைமைக்கான திருத்தங்கள் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தும் எதிர்ப்பார்த்த நலன்கள் நலன்பெறுனர்களுக்கு முறையாகக் கிடைக்காமை பற்றி கணக்காய்வுக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் காரணமாக இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1997 சனவரி 31 ஆந் திகதிய 5/97(vi) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 11 பங்களிப்பு பணத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார காப்புறுதி முறைமையானது பின்னர் ரூபா 125 பங்களிப்பு பணம் வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் சுய விருப்பத்தின் அடிப்படையில் ரூபா 300 மற்றும் ரூபா 600 மாதாந்த பங்களிப்பினை மேற்கொண்டு அக்ரஹார ரிதி மற்றும் ரண் என்பனவாக மேலும் விரிவாக்கப்பட்டிருந்தது. மேலும் அரசாங்க ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்காகவும் இக்காப்புறுதி முறைமையானது 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ரூபா 200 பங்களிப்பானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 600 வரை அதிகரித்து பிரதிபலன் கிடைத்தலானது ஆயுட்காலம் வரை அதிகரித்திருந்தது.

அனைத்து அரசாங்க ஊழியர்களையும் அக்ரஹார காப்புறுதி முறைமைக்கு பங்களிப்பு செய்ய வைத்தல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் அவ்வாறு அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களையும் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யவைப்பதப்பதற்கு முடியாதிருந்தது எனவும் பிரதிபலன்களை வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக பல்வேறு வகையான காந்த அட்டைகள் அடிக்கடி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அதன்மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது. மேலும் அக்ரஹார காப்புறுதி நலன்களை 10 வேலை நாட்களுக்குள் நலன்பெறுனர்களுக்குச் செலுத்த வேண்டிய போதிலும் உரிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நலன்பெறுனர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்துவதற்கும் 05 மாதங்களை மிகைத்த காலம் எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது எனவும் நலன்களை செலுத்துவதற்காக விண்ணப்பங்கள் கிடைத்த திகதியிலிருந்து 02 மாதங்களிலிருந்து 12 மாதங்கள் வரையான நீண்ட காலம் எடுத்திருந்தது எனவும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை தவறுகள் உள்ளவையாக இனங்காணப்பட்ட 30,742

விண்ணப்பங்களுக்காகவும் 2013 ஆம் ஆண்டிற்கு பின்னைய காலப்பகுதியின் போது 87,161 விண்ணப்பங்களுக்காகவும் பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காமை பிரதான சிக்கலாக இனங்காணக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது படிப்படியாக நட்டமடையும் நிலைமைக்கு மாறியுள்ள இந்நிதியத்தை மீண்டும் இலாபமடையும் நிலமைக்கு மாற்றுவதற்கும் நலன்பெறுனர்களைப் போல நிதியமும் எதிர்ப்பார்த்த நலன்களை முறையாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து இந்நிதியத்தை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தலை இந்த அறிக்கையில் சிபாரிசு செய்கின்றேன்.

## 2. அறிக்கையின் தன்மையும் பின்னணியும்

-----------------------------------------------------

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலமையினை மேம்படுத்துவதனை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் அக்ரஹார காப்புறுதி முறைமையானது 1997 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக்காப்புறுதி நலன்முறைமையிலிருந்து எதிர்ப்பார்த்த நலன்கள் நலன்பெறுனர்களுக்கு முறையாகக் கிடைப்பதில்லை என பல சந்தர்ப்பங்களில் கணக்காய்விற்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. அத்தகவல்களைப் பரீட்சித்த போது பெற்றுக் கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அக்ரஹார காப்புறுதியின் செயற்பாடுகள் தொடர்பாக மேலும் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட தகவல்களை உள்ளடக்கி இந்த விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 3. கணக்காய்வு நடைமுறை

---------------------------------

இந்த அறிக்கையினை வழங்கும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

### 3.1. ஏடுகள் ஆவணங்களைப் பரீட்சித்தல்

(i) அக்ரஹார காப்புறுதி தொடர்பாக பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை பணிப்பாளர் சபை தீர்மானங்கள் மற்றும் உரிய கோவைகள்.

(ii) அக்ரஹார காப்புறுதி தொடர்பாக காணப்படுகின்ற பாதீட்டு பிரேரனைகள்.

(iii) அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள்.

### 3.2. ஏனைய நடைமுறைகள்

(i) தற்பொழுது நிதியத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அக்ரஹார அங்கத்தவர் தரவுகளின் அடிப்படையில் (முறைமை) பரீட்சித்தல்.

(ii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வினாக்கொத்துக்களைச் சமர்ப்பித்து தகவல்களைச் சேகரித்தல்.

(iii) உரிய உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல்களை நடாத்துதல்.

### 4. நோக்கெல்லை

--------------------

கொழும்பு, கம்பஹா, குருணாகல், சிலாபம் ஆகிய 04 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 19 அரசாங்க நிருவனங்களின் 743 அக்ரஹார அங்கத்துவ மாதிரியாளர்களிடமிருந்து அக்ரஹார காப்புறுதி முறைமையின் தெளிவுபடுத்தல்களை இனங்காணல், நிதியத்தினால் அட்டைகள் வழங்குதல், கொடுப்பனவு செய்யும் நடைமுறைகள் மற்றும் அவற்றினைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் என்பன தொடர்பாக பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டது.

### 5. நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள்

----------------------------------------------

(i) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற அரை அரசாங்க நிறுவனங்களில் அக்ரஹார காப்புறுதி சம்பந்தமாக பரீட்சிப்புக்களை மேற்கொள்ளாமை.

(ii) முறைப்படியான மற்றும் நாளதுவரையான தரவு முறைமை இல்லாததன் காரணமாக அக்ரஹார அங்கத்துவ பணப்பெறுவனவுகளின் சரியான தன்மையை பரீட்சித்தல் சிக்கலானதாக இருத்தல்.

### 6. நடைமுறை

---------------

### 6.1. அக்ரஹார காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்

**6.1.1.** அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் 1999 சனவரி 31 ஆம் திகதிய 05/97 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் (பின்னிணைப்பு 01) அக்ரஹார காப்புறுதி முறைமையானது 1997 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான பதவியை வகிக்கின்ற அனைத்து உத்தியோகத்தர்களின் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதானது இக்காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்தலின் அடிப்படைக் குறிக்கோளாக இனங்காணப்பட்டிருந்தது.

இதன் போது அரசாங்கத்தினால் மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் கண்டிப்பாக இந்த மருத்துவக் காப்புறுதி முறைமைக்காக அரசாங்கத்தின் செலவில் பங்களிப்பு

வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அக்ரஹார என்ற பெயருள்ள காப்புறுதி முறைமையின் கீழ் உத்தியோகத்தர்களின் சுய விருப்பில் மாதாந்தம் ரூபா 11 தவணைப்பணத்தினை செலுத்தி தனிப்பட்ட திடீர் விபத்துக் காப்புறுதி மற்றும் கடன் பிணைக் காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இச்செயற்பாடு வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்க சேவைக் காப்புறுதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும்.

**6.1.2.** 2005 பாதீட்டு பிரேரனையின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சமமான மற்றும் அதிக நலன்கள் கிடைக்கும் காப்புறுதித் திட்டத்தினை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. மேற்கூறிய சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு பதிலாக 12/2005 ஆம் இலக்க 2005 மே 18 ஆம் திகதி அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் மூலம் (பின்னிணைப்பு 02) பின்வரும் பங்களிப்பு செய்யும் காப்புறுதித் திட்டங்கள் 2005 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது.

- மருத்துவக் காப்புறுதி.
- தனிப்பட்ட திடீர் விபத்து மற்றும் இயற்கை மரணக் காப்புறுதி.
- கடன் பிணைக் காப்புறுதி.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இக்காப்புறுதிக்காக அங்கத்தவரின் தவணைப்பணம் ரூபா 75 ஆகவும் அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 69 ஆகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**6.1.3.** அதன் பின்னர் 2013 ஜனவரி 07 ஆம் திகதி 12/2005(iv) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் (பின்னிணைப்பு 03) மூலம் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவைக்குப் புறம்பான ஊழியர்களுக்காக முறைப்படியாக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களையும் அக்ரஹார காப்புறுதி முறைமைக்கு பங்களிப்பு செய்தல் கட்டாயமாக்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரின் மாதாந்த தவணைப்பணமானது இதன் மூலம் ரூபா 125 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

**6.1.4.** ஆரம்பத்தில் வரையறுத்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தனியான ஒரு பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அக்ரஹார காப்புறுதி முறைமையானது தேசிய காப்பறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நிதியத்தை தோற்றுவிப்பதற்காகவும் அது சம்பந்தப்பட்ட அல்லது அது தொடர்பான சட்ட ரீதியான விடயங்களுக்காக ஒழுங்கு விதிகளை வழங்குவதினை குறிக்கோளாகக் கொண்டு 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் (பின்னிணைப்பு 04) 2006 செப்டம்பர் மாதத்திலிருந்து அமுல்படுத்தப்பட்டது.

**6.1.5.** மேலே கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோளாவது சபையினால் செயற்படுத்தப்படுகின்ற பங்களிப்புச் செய்கின்ற காப்புறுதித் திட்டத்தின்

மூலம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் எதிர்பாராத சுகாதார ஆபத்துக்கள் மற்றும் ஆதன சேதங்கள் சம்பந்தமாக..

(i) அரசாங்க உத்தியோகத்தர்கள், மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க சேவையிலிருந்து, மாகாண அரசாங்க சேவையிலிருந்து மற்றும் உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்திடமிருந்து, மாகாண சபையிலிருந்து அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து தற்பொழுது ஓய்வூதியத்தினைப் பெறுகின்ற நபர்களுக்காக.

(ii) 1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமூர்த்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க சமூர்த்தி நலன்பெறுனர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக.

(iii) விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக.

(iv) சபையின் சிபாரிசின் அடிப்படையில் அமைச்சரினால் ஏற்கனவே இனங்காணக்கூடிய தேவைப்பாடுகள் உள்ள நபர்கள் அல்லது நபர்களின் குடும்பங்களுக்காக.

(அ) பிரதிபலன்கள் மற்றும் பாதுகாப்பினை வழங்குதல், பல்வேறு வகையான பிரதிபலன்களுக்காக பல்வேறு திட்டங்கள் தொடர்புபட்டதாகும். பல்வேறு திட்டங்களுக்குரிய விடயங்கள் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உயர்ந்த சுகாதார வசதிகளை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வாட்டுக்களை நிர்மாணித்தல் அல்லது அவ்வாறான வசதிகளை வழங்கும் காணப்படுகின்ற ஏதாவது வாட்டுக்களின் தரத்தை அதிகரிப்பதினை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு ஏதாவது கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் உரிமை மூலதனம் மற்றும் பங்குரிமைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பங்குகளைப் பெற்றுக்கொள்வதின் சேமநலப் பங்களிப்பினை மேம்படுத்தல்.

(இ) இந்த அதிகாரச் சட்டத்தின் கீழான பிரதிபலன்கள் மற்றும் பாதுகாப்பிற்காக உரிமையுள்ள நபர்களின் கடன் பணத்திற்காக பிணையாக இருத்தல்.

(ஈ) அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புரையின் மூலம் ஏற்கனவே இனங்காணக்கூடிய அரசாங்கத்தின் ஏதாவது

ஆதனம் அல்லது ஏதாவது வகையான அல்லது வகுதியான ஆதனத்திற்காக பிணை வழங்குதல்.

(உ) மேற்கூறிய குறிக்கோள்களுக்கு உயர்ந்த முக்கியத்துவம் அளிப்பதற்குத் தேவையான அல்லது துணையான ஏனைய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

**6.1.6.** அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அதிகாரச்சட்டம் தொடர்புபடுகின்ற நபர்களுக்கு அந்நிதியத்திலிருந்து பிரதிபலன்கள் செலுத்தப்படுகின்றது. அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் நிர்ணயித்துக்காட்டப்பட்டுள்ள பணம் அந்நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவில் உறுதியாகக் குறிப்பிடப்பட்ட நபர்களை உள்ளடக்கிய தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும்.

**6.1.7. அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பங்களிப்பிற்கு...**

(i) ஒரு அரசாங்க உத்தியோகத்தர், மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஒரு உத்தியோகத்தர் மற்றும் உள்ளூராட்சி சேவையின் ஒரு உத்தியோகத்தரும் மற்றும்.

(ii) சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் அரசாங்கத்திடமிருந்து மாகாண சபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற ஒரு நபரும்.

(iii) சமூர்த்தித் திட்டம், விவசாயிகள் ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு பிரதிபலன் திட்டத்தின் ஒரு அங்கத்தவர் அல்லது மீனவர் ஓய்வூதியத்திட்டத்தின் ஒரு அங்கத்தவர் அல்லது சுய தொழிலில் ஈடுபட்டுள்ள நபரும்.

இந்த அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் பிரதிபலன்களுக்கு உரித்துள்ளவராக இருந்தும் அனைத்து நபர்களும் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புரையின் மூலம் உறுதியாக வரையறுக்கப்படக் கூடிய அளவான பணமாகிய பங்களிப்பு பணத்தினை அவ்வாறு வரையறுக்கப்படுகின்ற ஏதாவது நேரத்தில் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**6.1.8.** தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்படுகின்ற அக்ரஹார பிரதிபலன்களை திருத்தம் செய்வதற்காக 15/1806/706/027 ஆம் இலக்க 2015 திசம்பர் 09 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக 05 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினை நியமிப்பதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கினங்க அக்குழுவினால் தமது சிபாரிசினை உள்ளடக்கிய ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது (பின்னிணைப்பு 05). பின்வரும் தீர்மானங்களை உள்ளடக்கிய அந்த அறிக்கைக்காக 2016 மார்ச் 30 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய பணிப்பாளர்சபைத் தீர்மானத்தல் (பின்னிணைப்பு 06) காட்டப்பட்டிருந்தது.

- ➢ பொதுத் திரைசேரியிடமிருந்து மேலதிக நிதியை எதிர்ப்பார்க்காது அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட சிபாரிசுகளை அமுல்படுத்தும் வகையில் அங்கீகாரத்தினை வழங்குதல்.

- ➢ தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரை விசாரித்து இச்செயற்பாட்டிற்காக சுற்றறிக்கை ஆலோசனைகளை வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்குமாறு அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளருக்கு அலோசனை வழங்குதல்.

**6.1.9.** அதற்கிணங்க ரூபா 11 பங்களிப்பு பணத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார காப்புறுதி முறைமையானது 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி 12/2005(Vi) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் (பின்னிணைப்பு 07) சுயவிருப்பத்தின் அடிப்படையில் ரூபா 600 மற்றும் ரூபா 300 மாதாந்த பங்களிப்பினை மேற்கொண்டு முறையே ரண் மற்றும் ரிதி ஆக மேலும் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அதாவது மேலே **6.1.3** ஆம் பந்தியில் குறிப்பிட்ட ரூபா 125 மாதாந்த தவணைப்பணத்தில் இருப்பதற்கு அல்லது சுயவிருப்பத்தின் அடிப்படையில் ரூபா 300 மற்றும் ரூபா 600 வீதம் தவணைப்பணத்தைச் செலுத்தும் அடிப்படையில் அதிக பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை வழங்கப்பட்டிருந்தது.

**6.1.10.** மேலே **6.1.8** ஆம் பந்தியில் குறிப்பிட்ட அறிக்கையின் (பின்னிணைப்பு 06) அக்ரஹார காப்புறுதி முறைமை திருத்தம் செய்யப்பட்ட பிரதிபலன் பக்கேஜ்ஜின் III ஆம் பகுதியில் இக்காப்புறுதி முறைமையினுள் ஆதனக் கடனை தவிர்த்து பிணையாளர் தேவைப்படுகின்ற தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாத்தில் குறிப்பிட்ட அனைத்து கடன்களும் உள்ளடங்குகின்றன. கடனாளி அரசாங்க கடனைச் செலுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்களின் போது அவ்வாறான கடன் காப்புறுதிக் கம்பனியின் மூலம் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படும். இவ்வாறு காப்புறுதித் திட்டத்தின் கீழ் பிணை வைக்கப்படுகின்ற உச்ச அளவான கடனின் அளவு ரூபா 600,000 எனவும் அதற்குக் கீழே குறிப்பிட்ட 04 பிரதிபலன்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**பிரதிபலன்கள்**

--------------------

(i) ஏதாவது சுகயீனம் காரணமாக கடனாளி முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியளவிலோ ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகினால் அல்லது கடனாளி மரணமடைந்தால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அரசாங்கத்திற்கு நிலுவைக்கடன் பணத்தை செலுத்துதல் வேண்டும்.

(ii) உச்ச அளவு கடன் பிணையானது ரூபா 600,000 இற்கு மட்டுப்படுத்தப்படுவதனால் உத்தியோகத்தருக்கான கடனின் அளவு அவரின் சம்பளத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(iii) காப்புறுதிப் பணமானது நிலுவைக் கடன் பணத்தின் மீதியாகும்.

(iv) கடன் பணத்தை மீளச் செலுத்தும் காலம் 55 வயதை மிகைக்காதிருக்க வேண்டியதுடன் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருக்குமாயிருந்தால் அது 60 வயதினை மிகைக்காதிருத்தல் வேண்டும்.

**6.1.11.** மேலும் மேலே **6.1.2** ஆம் பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 12/2005(vi) ஆம் இலக்க திருத்தத்தின் மூலம் அரசாங்க ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கான ரூபா 200 கட்டாய மாதாந்த பங்களிப்பின் கீழ் காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரதிபலன்கள் தகமையாகுதல் 70 வயது வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் 12/2005(vii) ஆம் இலக்க 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் மூலம் (பின்னிணைப்பு 08) ரூபா 200 தொகையான பங்களிப்பு ரூபா 600 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் அக்குழு அறிக்கையின் பிரகாரம் பிரதிபலன் விண்ணப்பங்களானது கிராம உத்தியோகத்தரினால் உண்மையானது என சான்றுப்படுத்தியதன் பின்னர் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**6.1.12.** 2017 மார்ச் 20 ஆம் திகதிய 135-03 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் (பின்னிணைப்பு 09) கீழ் அரை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1000 மாதாந்த தவணைப்பணத்தின் அடிப்படையில் ரண் காப்புறுதித் திட்டமும் ரூபா 600 மாதாந்த தவணைப்பணத்தின் அடிப்படையில் ரிதி அக்ரஹார காப்புறுதித் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சமமான பிரதிபலன்கள் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

## 6.2. அக்ரஹார காப்புறுதியின் பிரதிபலன்களை வழங்குதலும் கணக்கு வைத்தலும்

---

**6.2.1.** 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் (பின்னிணைப்பு 04) அக்ரஹார காப்புறுதி அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிட்ட உத்தியோகத்தர்களும் தொடர்புபடுவதுடன் அதற்கினங்க அது அரசாங்க உத்தியோத்தர்களுக்கான கட்டாயக் காப்புறுதியாகும்.

(i) அரசாங்க உத்தியோகத்தர்கள்.

(ii) அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று அரசாங்கத்தின் ஓய்வூதியம் பெறுகின்ற நபர்கள்.

(iii) மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள்.

(iv) மாகாண அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று மாகாண சபையிலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற நபர்கள்.

(v) உள்ளூராட்சி சேவையின் அங்கத்தவர்கள்.

(vi) உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வுபெற்று உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற நபர்கள்.

(இந்நிதியமானது அரசாங்கத் துறையினைச் சார்ந்திருக்காத ஏனைய தரப்பினர்களுக்கும் உரியது என அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.)

**6.2.2.** பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் (பின்னிணைப்பு 10) 2019 யூன் 30 ஆம் திகதியில் அரசாங்க சேவையிலுள்ள முழுமையான உத்தியோகத்தர்கள் 1381024 ஆக இருந்ததுடன் அவற்றில் முப்படைகளைத் தவிர்த்து மொத்த அரசாங்க உத்தியோகத்தர்கள் 1128052 ஆகும். அவற்றில் வங்கி மற்றும் அரை அரசாங்க சேவையைச் சார்ந்த பகுதியாகிய 248625 இனை நீக்குகையில் அக்ரஹார காப்புறுதிக்குத் தகமை பெறுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 879427 ஆக இருந்ததுடன் 2019 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நிதியத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 743,973 என இனங்காணக்கூடியதாகயிருந்தது.

| | **மொத்தம்** | **வழமையானது** | **தங்கம்** | **வெள்ளி** |
|---|---|---|---|---|
| நிதியத்தில் பதிவுசெய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை (தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தகவல்கள் பிரகாரம்) | 743,973 | 334,073 | 331,518 | 78,382 |
| அக்ரஹார காப்புறுதிக்குத் தகமையுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை (முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம்) | 879,427 | | | |
| பதிவுசெய்து கொள்ளாத அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 129,454 | | | |

மேலும் 12/2005 ஆம் இலக2005 மே 18 ஆம் திகதி 2005 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் முன்மொழியப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக புதிய காப்புறுதி முறைமையை ஸ்தாபிப்பதற்காக (அக்ரஹார) சுற்றறிக்கையின் (பின்னணைப்பு 02) **7.2** ஆம் பந்தியின் பிரகாரம் வேலை செய்யும் 10 வார நாட்களுக்குள் காப்புறுதிப் பிரதிபலன்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

**6.2.3.** 2006 ஆகஸ்ட் 29 ஆம் திகதி 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரக் கூட்டத்தின் 13(உ) பந்தியின் பிரகாரம் நிதியம் சம்பந்தமாக சாதாரண ஒரு கணக்கு பேணப்பட வேண்டியதுடன் நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவர் சம்பந்தமாக தனித்தனியாக தனிப்பட்ட கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

**6.2.4.** எவ்வாறாயினும் அரசாங்கத்தினால் வருடாந்தம் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பங்களிப்புப் பணத்தின் அளவு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இன் படியாகும்.

**அட்டவணை இலக்கம் 01 – அரசாங்கம் நிதியத்திற்கு அனுப்பி வைத்த பங்களிப்புப் பணம் 2013 – 2018**

| ஆண்டு | வழங்கிய பங்களிப்புப் பணம் (ரூபா மில்லியன்) |
|---|---|
| 2013 | 410 |
| 2014 | 400 |
| 2015 | 400 |
| 2016 | 550 |
| 2017 | 500 |
| 2018 | 750 |

ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டிற்காக தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது அச்சந்தர்ப்பம் வரை நிதியத்திடம் காணப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் அங்கத்திவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையானது மேலே **6.1.2** ஆம் பந்தியில் குறிப்பிட்ட ரூபா 69 தரப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியானது அரசாங்கத்தின் பங்களிப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

## 6.3. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்துதலும் பிரதிபலன்களைச் செலுத்துதலும்

**6.3.1.** பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அக்ரஹார காப்புறுதி இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு முடியாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக நலன்பெறுனர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் தொடர்பான பகுப்பாய்வு பின்வரும் அட்டவணை இலக்கம் 02 இல் தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 02 – நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு எடுத்த காலம்**

| தே.அ.அட்டை இலக்கம் | விண்ணப்பித்த திகதி | பதிலளித்த திகதி | கால தாமதம் | பெறுமதி ரூபா | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|---|---|
| 597924720v | 11/21/2013 | 12/31/2015 | 2 years | 0 | FAULTS INFORMED |
| 621273965v | 4/25/2011 | 6/15/2012 | 1 year and 2 months | 300000 | FAULTS INFORMED |
| 697331581v | 8/15/2012 | 2/28/2013 | 6 months | 3500 | FAULTS INFORMED |
| 652621759v | 9/10/2012 | 2/27/2013 | 5 months | 0 | FAULTY |
| 807031104v | 9/20/2012 | 3/8/2013 | 6 months | 0 | FAULTS INFORMED |
| 607920052x | 10/3/2012 | 2/19/2013 | $4^{1/2}$ months | 3500 | FAULTS INFORMED |
| 582291055v | 10/23/2012 | 5/20/2013 | 7 months | 0 | FAULTS INFORMED |
| 665960909v | 10/23/2012 | 5/20/2013 | 7 months | 3500 | FAULTS INFORMED |
| 643373262v | 10/31/2012 | 5/8/2013 | 7 months | 19030 | FAULTS INFORMED |
| 731080275v | 11/5/2012 | 4/11/2013 | 5 months | 0 | FAULTY |
| 835824195v | 11/29/2012 | 5/27/2013 | 6 months | 25888 | FAULTS INFORMED |
| 652073875v | 12/11/2012 | 5/20/2013 | 5 months | 3500 | FAULTS INFORMED |
| 602810780v | 1/21/2013 | 7/15/2013 | 6 months | 8250 | FAULTS INFORMED |
| 761950410v | 3/6/2013 | 10/4/2013 | 7 months | 0 | FAULTS INFORMED |
| 660582070v | 5/28/2013 | 12/2/2013 | 7 months | 3500 | FAULTS INFORMED |
| 673093167v | 10/24/2013 | 4/10/2014 | 6 months | 0 | FAULTY |
| 635651156v | 12/11/2013 | 6/28/2014 | 6 months | 300000 | FAULTS INFORMED |
| 738420160v | 1/22/2019 | 6/14/2019 | 5 months | 0 | REJECTED INFORMED |
| 805914084v | 1/25/2019 | 10/21/2019 | 9 months | 0 | REJECTED INFORMED |
| 611622988v | 3/29/2019 | 8/22/2019 | 5 months | 0 | REJECTED INFORMED |

**6.3.2.** 2019 திசெம்பர் 13 ஆம் திகதி கணக்காய்வுக்கு வழங்கிய 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான அக்ரஹார கோரிக்கை கொடுப்பனவு தகவல்களின் பிரகாரம் கோரிக்கை விண்ணபபங்கள் கிடைத்ததன் பின்னர் கோரிக்கைகளைச் செலுத்துவதற்கு எடுத்த காலம் கீழே தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 03 – கோரிக்கைகளைக் கொடுப்பனவு செய்வதற்கு எடுத்த காலம்**

| கால எல்லை | கோரிக்கைகளைக் கொடுப்பனவு செய்யும் அளவு |
|---|---|
| 02 – 04 மாதங்கள் | 16,552 |
| 04 – 06 மாதங்கள் | 2,249 |
| 06 – 08 மாதங்கள் | 445 |
| 08 – 10 மாதங்கள் | 127 |
| 10 – 12 மாதங்கள் | 19 |

**6.3.3.** மேலும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை தொடர்பாக இவ்வறிக்கைத் திகதி வரை கொடுப்பனவு செய்யப்படாத அக்ரஹார கோரிக்கைகளின் தவறுகளுடனான விண்ணப்பங்களை பின்வருமாறு இனங்காணக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை இலக்கம் 04 - இனங்காணப்பட்ட தவறுகளுடனான விண்ணப்பங்கள் 2003 – 2013**

| ஆண்டு | கோரிக்கைகளின் தவறுகளுடனான விண்ணப்பங்கள் |
|---|---|
| 2003 | 6 |
| 2005 | 1 |
| 2006 | 2484 |
| 2007 | 1073 |
| 2008 | 257 |
| 2009 | 1841 |
| 2010 | 4564 |
| 2011 | 5716 |
| 2012 | 6746 |
| 2013 | 7931 |
| 2006 - 2013 | 123 |
| | 30742 |

**அட்டவணை இலக்கம் 05 - நிராகரிக்கபபட்ட விண்ணப்பங்கள்**

| ஆண்டு | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 | 276 |
| 2014 | 13,227 |
| 2015 | 11,668 |
| 2016 | 11,693 |
| 2017 | 14,351 |
| 2018 | 16,586 |
| 2019 | 19,360 |
| | 87,161 |

**6.3.4.** மேலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகள் தொடர்பாக இந்த அறிக்கைத் திகதி வரை நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்

**6.3.5.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**6.4. அக்ரஹார நலன்பெறுனர்களுக்காக இலத்திரனியல் அட்டைகளை (E - card) அறிமுகப்படுத்துதலும் கொள்வனவு செய்தலும்**

**6.4.1.** அரசாங்க ஊழியர்களுக்கு அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பணத்தைச் செலுத்தாது வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெறும் வசதிகள் (வைப்புப் பணத்தை செலுத்தாது) வழங்கும் குறிக்கோளில் 2011 ஆம் ஆண்டிலிருந்து அக்ரஹார பிரதிபலன்களுக்காக இலத்திரனியல் அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் திட்டமிட்டிருந்தது.

**6.4.2.** இணைய தளத்தில் அக்ரஹார காப்புறுதியினுள் ஆற்றலுள்ள முக்கியமான வைத்தியசாலைகளின் கீழ் 25 வைத்தியசாலைகள் காட்டப்பட்டுள்ளதுடன் அக்ரஹார இலத்திரனியல் அட்டைகளின் உடைமையாளர்களுக்கு அந்த வைத்தியசாலைகளின் மூலம் கிடைக்கின்ற பிரதிபலன்கள் பின்வருமாறாகும்.

- விசேட சத்திர சிகிச்சைப் பெக்கேஜ்.
  - அக்ரஹார நலன்பெறுனர்களுக்கு விசேட விலை விகிதத்தில் சத்திர சிகிச்சை பெக்கேஜ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- உள்ளக நோயாளர்களுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய கழிவுகள்.
  - அக்ரஹார நலனாளிகளுக்கு நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ளும் போது வைத்தியசாலைக் கட்டணம் அறவிடப்படுவதில்லை.
  - வைத்தியசாலை அறைகளுக்காக கட்டணம்.

- ஆய்வுகூடப் பரிசோதனை.
- கதிரியக்கப் பரிசோதனை.

- வெளிநோயாளிகளுக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய கழிவுகள்.
    - ஆய்வுகூடப் பரிசோதனை.
    - கதிரியக்கப் பரிசோதனை.

**6.4.3.** கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஜனவரி 06 ஆம் திகதி வரை 960,684 அங்கத்தவர்களுக்கு அக்ரஹார அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

**அட்டவணை இலக்கம் 06 - வழங்கப்பட்ட (E- card)களின் அளவு**

| | மொத்தம் | வழமையானது | தங்கம் | வெள்ளி |
|---|---|---|---|---|
| அக்ரஹார அட்டைகள் வழங்குதல் | 960,684 | 540,684 | 348,000 | 72,000 |

**6.4.4.** 2011 நவம்பர் 04 ஆம் திகதி E Care Solution (PVT) Limited நிறுவனத்திடமிருந்து ரூபா 21,820,000 மொத்த கிரியத்திற்கு 650,000 காந்த அட்டைகளையும் காந்த அட்டைகளை வாசிக்கின்ற 20 இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்காக கட்டளையிடப்பட்டிருந்தது. அதற்காக நிதியத்திலிருந்து அதன் மொத்த பெறுமதியதில் 20 சதவீதம் அல்லது ரூபா 4,364,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2012 மார்ச் 21 ஆம் திகதி 100,000 அட்டைகளுக்காகவும் 2012 யூலை 24 ஆம் திகதி 150,000 அட்டைகளுக்காகவும் முறையே ரூபா 2,440,000 மற்றும் ரூபா 3,585,000 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. அக்கொடுப்பனவு செய்யப்பட்ட அட்டைகள் தொடர்பாக 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதி 221630 அட்டைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

**6.4.5.** மேலும் ரூபா 1,992,500 பெறுமதியான 100,000 அக்ரஹார வழக்கமான அட்டைகள் 2018 யூன் 07 ஆம் திகதி Ceylon Business Appliances (Private) Ltd இடமிருந்து நிதியம் கொள்வனவு செய்திருந்ததுடன் ரூபா 2,204,032.50 தொகையான 150,000 அக்ரஹார கோல்ட் அட்டைகள் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**6.5. அக்ரஹார காப்புறுதயின் நிதி மீளாய்வு**

---------------------------------------------------

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அக்ரஹார பிரிவின் நிதி மீளாய்வு பின்வரும் அட்டவணை இலக்கம் 07 இல் தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 07 – அக்ரஹார காப்புறுதியின் நிதி மீளாய்வு 2014 – 2018**

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| அக்ரஹார தவணைப்பண வருமானம் | 1,494,899,976 | 1,636,567,419 | 2,004,436,602 | 2,746,522,599 | 4,037,420,9 |
| அங்கத்தவர்களின் பங்ளிப்பு | 1,904,899,976 | 1,236,567,415 | 1,454,436,602 | 2,226,522,599 | 3,267,420,9 |
| அரசாங்கத்தின் பங்களிப்பு | 400,000,000 | 400,000,000 | 550,000,000 | 500,000,000 | 750,000,0 |
| கோரிக்கைகளுக்கான கொடுப்பனவு | 1,228,123,716 | 1,561,625,099 | 1,950,168,496 | 2,873,715,118 | 4,301,595,4 |
| வரிக்கு முன்னைய இலாபம் (அக்ரஹாரப் பிரிவு) | 266,776,260 | 74,942,320 | 54,268,106 | (127,192,519) | (264,174,49) |

அதற்கிணங்க அரசாங்கத்தின் பங்களிப்பின் காரணமாக நிதியம் இலாபம் உழைத்திருந்தும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகள் தொடர்பாக முறையே ரூபா 127 மில்லியன் மற்றும் ரூபா 264 மில்லியன் வரிக்கு முன்னைய நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

**6.6. கேள்விக் கொத்துக்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்**

---

**6.6.1. அ**க்ரஹார தங்கம் வெள்ளி மற்றும் வழக்கமான காப்புறுதித் திட்டமானது இலங்கையிலுள்ள அனைத்து அரசாங்க ஊழியர்களையும் உள்ளடக்குவதனால் மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 19 நிறுவனங்களின் மூலம் 743 அரசாங்க ஊழியர்களை உள்ளடக்கும் வகையில் அக்ரஹார காப்புறுதி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட முக்கியமான வரைறைகளினூடாக கேள்விக் கொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நியதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 19 நிறுவனங்கள் பின்வருமாறாகும்.

| நிறுவனம் | நிறுவனம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற மாவட்டம் | பிரதிநிதித்துவம் செய்கின்ற அக்ரஹார அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| -------------- | --------------------------------------------- | --------------------------------------------- |
| | - | - |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | கொழும்பு | 46 |
| தேசிய பாதீட்டுத் திணைக்களம் | | 41 |
| அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம் | | 30 |
| தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம் | | 12 |
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | | 27 |
| அரசாங்க நிதித் திணைக்களம் | | 33 |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | | 28 |
| அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் | | 28 |
| வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | | 30 |
| திறைசெரி செயற்பாடுகள் திணைக்களம் | | 21 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு | | 77 |
| மாவட்ட செயலகம் - கம்பஹா | கம்பஹா | 40 |
| மாநகர சபை – கம்பஹா | | 43 |
| பிரதேச சபை – கம்பஹா | | 39 |
| மாநகர சபை - கடுவில | | 46 |
| மாகாண சுகாதார அலுவலகம் - வடமேல் | குருணாகல் | 50 |
| மாவட்ட செயலகம் - குருணாகல் | | 78 |
| வடமேல் மாகாண நிர்ப்பாசன திணைக்களம் | | 19 |
| மாநகர சபை – சிலாபம் → | சிலாபம் | 55 |
| | | ------ |
| | | 743 |
| | | === |

**6.6.2.** அந்த நிறுவனங்களுக்கு கேள்விக் கொத்துக்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருமாறு பொழிப்பாக்கித் தரப்படலாம்

**அட்டவணை இலக்கம் 08 – அக்ரஹார காப்புறுதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் விளைவுகள்**

| | | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | Yes (ஆம்) | No (இல்லை) | No (இல்லை) | No (இல்லை) |
| (i) | அக்ரஹார காப்புறுதி தொடர்பாக போதியளவிளான தெளிவுப்படுத்தல்கள் காணப்பட்டதா? | 363 | 259 | 49% | 35% |
| (ii) | அக்ரஹார கோரிக்கைகளுக்காக வேண்டிக்கொள்ளப்பட்ட மொத்த பணப் பெறுவனவு | 219 | 180 | 29% | 24% |
| (iii) | E – cards கள் பெறுவனவு | 312 | 350 | 42% | 47% |
| (iv) | E – cardகள் மூலம் கிடைக்கின்ற பிரதிபலன்கள் தொடர்பான தெளிவுப்படுத்தல்கள் | 66 | 549 | 9% | 74% |
| (v) | E – cardகளின் மூலம் பிரதிபலன்களை வழங்குகின்ற தனியார் வைத்தியசாலைகள் தொடர்பாகத் தெரிந்துகொள்ளல்? | 66 | 404 | 9% | 54% |
| (vi) | அந்த வைத்தியசாலைகளின் மூலம் தங்கம் வெள்ளி அட்டைகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கழிவுகளை உள்ளடக்கிய ஏனைய பிரதிபலன்கள் தொடர்பாகத் தெரிந்துகொள்ளல்? | 79 | 343 | 11% | 46% |
| (vii) | பிரதேசத்திற்கு அண்மையில் அக்ரஹார மருத்துவ வசதிகளை வழங்குகின்ற வைத்தியசாலைகள் உள்ளனவா? | 116 | 162 | 16% | 22% |
| (viii) | அக்ரஹார காப்புறுதியினைத் தவிர்த்து ஏனைய காப்புறுதிகள் தொடர்பாக நீங்கள் தெரிந்துள்ளீர்களா? | 160 | 480 | 22% | 65% |
| (ix) | அக்ரஹார நிறுவனத்துடன் இலகுவாக தொடர்பு கொள்வதற்கு (தொலைபேசியின் மூலம், web site இனூடாக) காணப்படுகின்ற இயலுமை தொடர்பாக திருப்தி கொள்கின்றீர்களா? | 317 | 223 | 43% | 30% |

**6.6.3.** பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு இணங்க 743 அக்ரஹார அங்கத்தவர்களுக்கு மத்தியில் அக்ரஹார காப்புறுதி தொடர்பாக அவர்களிடம் காணப்படுகின்ற தெளிவுப்படுத்தல்கள் தொடர்பாக 622 அங்கத்தவர்கள் பதில்கள் வழங்கியிருந்ததுடன் அது தெரிவுசெய்யப்பட்ட சதவீதத்தில் 84 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. அதற்கிணங்க அக்ரஹார காப்புறுதி தொடர்பாக 363 அங்கத்தவர்களுக்கு அதாவது 49 சதவீதமானவர்களுக்குப் போதியளவான தெளிவுப்படுத்தல்கள் காணப்படுகின்றன எனவும் 35 சதவீதமானவர்களுக்கு போதியளவான தெளிவுப்படுத்தல்கள் இல்லை என்பதனையும் இனங்காணக்கூடியதுமாகவும் இருந்தது.

**அட்டவணை இலக்கம் 09 – அறிந்து கொள்ளல் தொடர்பான கேள்விக் கொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்**

| | மொத்த கேள்விக் கொத்துக்கள் | போதியளவான தெரிந்து கொள்ளல்கள் இருந்தனவா? | | |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | வெற்றிடம் |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 46 | 28 | 17 | 1 |
| தேசிய பாதீட்டு திணைக்களம் | 41 | 21 | 14 | 6 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு | 77 | 45 | 28 | 4 |
| அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களம் | 30 | 17 | 7 | 6 |
| தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 12 | 10 | 2 | 0 |
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 27 | 14 | 6 | 7 |
| அரசாங்க நிதித் திணைக்களம் | 33 | 13 | 18 | 2 |
| மாவட்ட செயலகம் - குருணாகல் | 78 | 42 | 23 | 13 |
| வயம்ப மாகாண சுகாதார திணைக்களம் | 50 | 27 | 14 | 9 |
| நகர சபை – சிலாபம் | 55 | 22 | 20 | 13 |
| மாவட்ட செயலகம் - கம்பஹா | 40 | 20 | 8 | 12 |
| மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | 19 | 11 | 6 | 2 |
| கம்பஹா பிரதேச சபை | 39 | 10 | 21 | 8 |
| கம்பஹா மாநகர சபை | 43 | 24 | 8 | 11 |
| கடுவில மாநகர சபை | 46 | 16 | 24 | 6 |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | 28 | 11 | 13 | 4 |
| அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் | 28 | 9 | 13 | 6 |
| வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாட்டுத் திணைக்களம் | 30 | 15 | 11 | 4 |
| திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 21 | 8 | 6 | 7 |
| மொத்தம் | 743 | 363 | 259 | 121 |
| | | 622 | | |
| மொத்த கேள்விக் கொத்துக்களின் சதவீதம் | | 49% | 35% | 6% |
| | | 84% | | |

**6.6.4.** எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டில் மற்றும் 2019 ஆம் ஆண்டில் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தெளிவுப்புடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் முறையே 293 மற்றும் 372 நடாத்தப்பட்டிருந்தன என்று தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்கள் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

## 7. அவதானிப்புக்கள்.

**7.1.** மேலேயுள்ள **6.2.1** ஆம் பந்தியின் பிரகாரம் அக்ரஹார காப்புறுதித் திட்டமானது அனைத்து அரசாங்க ஊழியர்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கட்டாயக் காப்புறுதியாக இருந்த போதிலும் மேலே **6.2.2** ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 129454 அரசாங்க ஊழியர்களை 2019 யூன் 30 ஆம் திகதி வரை அக்ரஹார காப்புறுதிக்கு பங்களிப்பு செய்ய வைப்பதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**7.2.** மேலேயுள்ள **6.1.2** ஆம் பந்தியின் பிரகாரம் இக்காப்புறுதித் திட்டத்திற்கு அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 69 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தும் **6.1.3** ஆம் பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கையில் காப்புறுதி கட்டாயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்பு ரூபா 125 ஆக ஆக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போதும் **6.1.9** ஆம் பந்தியின் பிரகாரம் சுயவிருப்பின் அடிப்படையில் ரூபா 300 மற்றும் ரூபா 600 வரை பங்களிப்பினை அதிகரிக்கின்ற போதும் அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் **6.2.5** ஆம் பந்தியின் பிரகாரம் அடிக்கடி நிதியத்தினால் பொதுத் திறைசேரியிடமிருந்து அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் ரூபா 69 பங்களிப்புப் பணத்தினை பெற்றுக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**7.3.** மேலே **6.1.1** இலிருந்து **6.1.7** வரையான பந்திகளில் குறிப்பிட்டவாறு இந்த அக்ரஹார காப்புறுதி பங்களிப்புப் பணத்தில் அரசாங்க ஊழியர்களிடமிருந்து, ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களிடமிருந்து மற்றும் அரை அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களிடமிருந்து மாத்திரம் பங்களிப்பு செய்வதாகத் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த சுகாதார காப்புறுதித் திட்டத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகளும் துறை சார்ந்த நிதிக் கூற்றுக்களில் அக்ரஹார காப்புறுதி முறையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அக்ரஹார காப்புறுதிக்குரிய செயற்பாட்டு நிலைமை சரியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7.4.** மேலும் **6.2.4** ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு அங்கத்தவர் சம்பந்தமாக வெவ்வேறாக தனித்தனி கணக்குகள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்காததுடன் **6.2.5** ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தினால் வருடாந்தம் ஒரு தடவையில் நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேலும் சாதாரணம், தங்கம், வெள்ளி

தவணைப்பணங்கள் ஓய்வுபெற்ற மற்றும் அரை அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் ஒரே வருமான மற்றும் செலவு விடயமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் நாளதுவரையான தரவு அடிப்படை இல்லாததன் காரணமாக அவ்வருமானங்கள் சரியானது என்பதற்கு அல்லது காப்புறுதியின் கீழ் கிடைக்கின்ற வருமானத்தில் கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்காண்பதற்கான ஒரு அடிப்படை அவதானிக்கப்படவில்லை.

**7.5.** புதிய காப்புறுதி முறைமையானது 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதனை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கும் அதனை ஒரு கட்டாயக் காப்புறுதி முறைமையாக அமுல்படுத்துவதற்கும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் **6.1.11** ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதியக்காரர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டம் வழங்கப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு உரையின் 259 ஆவது பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் அந்த நிவாரணத்தை அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் **6.1.12** ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு அரை அரசாங்க உத்தியோகத்தர்களை அக்ரஹார காப்புறுதிக்காக சேர்த்துக்கொள்வதற்கு 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் மாத்திரம் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் சேர்த்துக்கொள்வதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.6.** மேலேயுள்ள **6.2.3** ஆம் பந்தியின் பிரகாரம் அக்ரஹார காப்புறுதி பிரதிபலனானது 10 வேலை நாட்களுக்குள் நலன்பெறுனர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் உரிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நலன்பெறுனர்களுக்கு அது சம்பந்தமாகத் தெரியப்படுத்துவதற்கு 05 மாதங்களை மிகைத்த காலம் எடுத்திருந்த சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டது என மேற்கூறிய அட்டவணை 05 இன் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக இந்நிதியத்தின் எதிர்ப்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் பிரதிபலன்களை செலுத்துவதற்காக விண்ணப்பங்கள் பெற்ற திகதியிலிருந்து 02 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையான நீண்ட காலம் எடுத்துள்ளது எனவும் மேற்கூறிய அட்டவணை இலக்கம் 03 இல் குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம் மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை மேற்கூறிய அட்டவணை இலக்கம் 03 இல் காட்டப்பட்டவாறு தவறுகளுடனானது என இனங்காணப்பட்ட 30742 விண்ணப்பங்களுக்காகவும் அட்டவணை இலக்கம் 04 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டிற்குப் பின்னைய காலப்பகுதியின் போது 87161 விண்ணப்பங்களுக்காகவும் பணத்தை செலத்துவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7.7.** மேலேயுள்ள **6.4.3** ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்டுள்ள அங்கத்தவர்களை மிகைத்து 216,711 அக்ரஹார அட்டைகள் வழங்கப்படுள்ளன என்பது தெளிவானதுடன் அதற்கிணங்க இந்த அட்டைகளை

வழங்கும் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

**7.8.** மேலும் மேலேயுள்ள **7.6** ஆம் பந்தியில் குறிப்பிட்ட அட்டைகளைப் பயன்படுத்தும் போது உரிய வைத்தியசாலைகளின் கீழ் 05 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரையான கழிவு கிடைத்துள்ளது எனவும் ஒவ்வொரு ஆண்டின் போதும் அந்த சதவீதம் மாற்றமடையலாம் எனவும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அக்கழிவுகள் மற்றும் விசேட விகிதாசாரம் தொடர்பாக உறுதியான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது.

**7.9.** அக்ரஹார காப்புறுதியானது கட்டாயக் காப்புறுதி முறைமையாக இருந்த போதிலும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களில் 35 சதவீதம் அளவானவர்கள் இக்காப்புறுதி முறைமை சம்பந்தமாக தெரிந்துகொண்டிருக்காததுடன் பதில்கள் வழங்கிய உத்தியோகத்தர்களில் 47 சதவீதமானவர்கள் 2019 செப்டம்பர் 19 ஆம் திகதி வரை E – Card களைப் பெற்றிருக்கவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் 74 சதவீதம் அளவானவர்கள் இந்த E – Card களிலிருந்து கிடைக்கும் பிரதிபலன்கள் தொடர்பாக தெரிந்துகொண்டிருக்கவில்லை. அக்ரஹார காப்புறுதி முறைமை தொடர்பாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது 665 தெளிவுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன என குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய தெரிவுப் பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்ப்பார்த்த பிரதிபலன்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**7.10.** மேலேயுள்ள **6.4.4** ஆம் பந்தியின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 250,000 காந்த அட்டைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அந்த 28,370 அட்டைகளை வழங்குவற்கு உரிய ஒப்பந்த நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. மேலும் அந்த அட்டைகளுக்காக மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 865,285 பணத்தை கணக்காய்வுத் திகதி வரை மீள அறவீடு செய்வதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்ததுடன் அந்த நிறுவனமும் இந்த அறிக்கைத் திகதியளவில் செயற்படாதிருந்தது. மேலும் அவ்வாறு 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து அட்டைகளும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக இந்த அட்டைகள் மற்றும் இயந்திரத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 7,683,790 பணம் முழுவதும் விளைவற்றதாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**7.11.** 2018 யூன் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட சாதாரண அட்டைகளில் 65 சதவீதம் அதாவது 65,504 அட்டைகள் மற்றும் 2019 பெப்ரவரியில் கொள்வனவு செய்த ரண் அட்டைகளில் 37 சதவீதமானவை 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை நிறுவனத்தில் காணப்பட்டது. அந்த ரண் அட்டைகளில் 13,750 அட்டைகளுக்கு தரவுகளை உள்ளடக்குவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த அட்டைகள் பாதுகாப்பின்றி புதிய கட்டிடத்தின் வெளிச்செல்லல் கதவுக்கு

அருகாமையில் குவித்து வைக்கப்பட்டிருந்த முறைமையும் அவதானிக்கப்பட்டது.உருவப்படம் இலக்கம்

**01 - அக்ரஹார அட்டைகள் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்த முறைமை**





**7.12.** 12/2005 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கடன்காப்புறுதி முறைமையினை ஆக்கபூர்வமாக அமுல்படுத்துவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7.13.** 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 267 மில்லியன் அளவான இலாபத்தை உழைப்பதற்கு நிதியத்திற்கு முடியுமாக இருந்த போதிலும் அந்த ஆண்டிலிருந்து படிப்படியாக உழைக்கின்ற இலாபம் வீழ்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 127 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 264 மில்லியனாக நட்டம் அடையும் நிலைக்கு மாறயுள்ளது என மேலே அட்டவணை இலக்கம் 07 இன் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

## 8. சிபாரிசுகள்

---------------

**8.1.** கட்டயாகக் காப்புறுதித் திட்டமான அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக இன்று வரை பங்களிப்புச் செய்வதற்கு முடியாதுள்ள அரசாங்க ஊழியர்கள் விரைவாக அந்த நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு 7.1)

**8.2.** அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ள ஒவ்வொரு நபர்களின் பெயரில் கணக்குகளை ஆரம்பித்து நாளதுவரையாகப் பேணும் முறையான நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு 7.3)

**8.3.** அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் இனங்காணப்பட்ட புதிய பிரேரணையையும் உள்ளடக்கி தற்பொழுது அமுல்படுத்துகின்ற அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற சுற்றறிக்கைகளைத் திருத்தம் செய்வதற்காக முறையான நடடிக்கையை எடுத்து நலன்பெறுனர்களுக்கு அதிக பிரதிபலன்களை வழங்குதல்.
(தொடர்பு 7.11)

**8.4.** அதிக கிரயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறு வகையான அக்ரஹார அட்டைகளை உரிய நலன்பெறுனர்களுக்கு விரைவாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும் அதன் மூலம் கிடைக்கின்ற நலன்கள் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையைத் தயாரிப்பதற்கு முயற்சி எடுத்தல்.
(தொடர்பு 7.8, 7.10)

**8.5.** 2012 ஆம் ஆண்டின் போது சிக்கனமற்ற வகையில் அட்டைகளையும் இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த நபர்கள் தொடர்பாக முறையான விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு 7.9)

**8.6.** நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமாக அதே போல அறிக்கைத் திகதி வரை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத அக்ரஹார விண்ணப்பங்கள் சம்பந்தமாக விரைவாக நடவடிக்கை எடுத்து நலன்பெறுனர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு 7.5)

**8.7.** நிறுவனத்தினால் அதிக கிரயத்தில் கொள்வனவு செய்துள்ள பல்வேறு வகையான அட்டைகளை முறைப்படியாகக் களஞ்சியப்படுத்துவதற்கும் நலன்பெறுனர்களுக்கு அட்டைகளை வழங்கும் போது முறையான நடைமுறைகளைப் பின்பற்றி

வழங்குவதற்கும் அட்டைகள் ஒன்றிற்கு மேல் வழங்கியுள்ள சந்தர்ப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்து அதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
(தொடர்பு 7.10)

**8.8.** 2017 ஆம் ஆண்டிலிருந்து நிதியம் நட்டமடைவது தொடர்பான காரணத்தைப் பரீட்சித்து உரிய சிக்கலுக்கான பரிகாரத்தை வழங்கி நிதியம் மிண்டும் இலாபமடையும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்தல்.
(தொடர்பு 7.12)

**8.9.** அக்ரஹார காப்புறுதிக்காக திறைசேரியினால் நிதியத்திற்கு வழங்குகின்ற ரூபா 69 பங்களிப்பு தொடர்பாகக் காணப்படுகின்ற சட்டரீதியான தன்மைப் பற்றி தீர்ப்பனவு செய்தல். (தொடர்பு 7.12)

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பி.சி விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2021 மார்ச் 10 ஆம் திகதி